தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 8, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஜூன் 22, செவ்வாய்க்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு."

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. மு. பாண்டுரங்கன், திரு. அ. முஹம்மத்ஜான், திரு. அ. பாப்பாசுந்தரம், முனைவர் செ. அரங்கநாயகம், திரு. தி.செ. விஜயன், திரு. வி.எஸ். இராஜி, திரு. கி.இரா. இராஜேந்திரன், திரு.ச. சகாதேவன், செல்வி எல். சுலோசனா, திரு. கே.பி. ராஜு, திரு. கி. இராமச்சந்திரன், திரு. எம். அன்பழகன், திரு. ஜெ. பன்னீர்செல்வம் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. மு. பாண்டுரங்கன்*

அவர்கள் 2–3–2021 அன்றும், திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள் 23–3–2021 அன்றும், திரு. அ. பாப்பாசுந்தரம் அவர்கள் 18–4–2021 அன்றும், முனைவர் செ. அரங்கநாயகம் அவர்கள் 29–4–2021 அன்றும், திரு. தி.செ. விஜயன் அவர்கள் 8–5–2021 அன்றும், திரு. வி.எஸ். இராஜி அவர்கள் 12–5–2021 அன்றும், திரு. கி.இரா. இராஜேந்திரன் அவர்கள் 18–5–2021 அன்றும், திரு. ச. சகாதேவன் அவர்கள் 22–5–2021 அன்றும், செல்வி எல். சுலோசனா அவர்கள் 23–5–2021 அன்றும், திரு. கே.பி. ராஜூ அவர்கள் 25–5–2021 அன்றும், திரு. கி. இராமச்சந்திரன் அவர்கள் 5–6–2021 அன்றும், திரு. எம். அன்பழகன் அவர்கள் 11–6–2021 அன்றும் மற்றும் திரு. ஜெ. பன்னீர்செல்வம் அவர்கள் 16–6–2021 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பாண்டுரங்கன் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் ராணிப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2011–2013 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்கள். மேலும், 2019 ஆம் ஆண்டு முதல் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. அ. பாப்பாசுந்தரம் அவர்கள் 1989–1991, 1991–1996, 2001–2006 மற்றும் 2011–2016 ஆகிய ஆண்டுகளில் குளித்தலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள். மேலும், 2002–2003 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

முனைவர் செ. அரங்கநாயகம் அவர்கள் 1974–1976, 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் கோயம்புத்தூர் (மேற்கு) தொகுதியிலிருந்தும், 1985–1988 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் தொண்டாமுத்தூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1977–1986 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

2021 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]

திரு. தி.செ. விஜயன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. வி.எஸ். இராஜி அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் செய்யூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கி.இரா. இராஜேந்திரன் அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் பர்கூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. ச. சகாதேவன் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் செஞ்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

செல்வி எல். சுலோசனா அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் மேட்டுப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. கே.பி. ராஜூ அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் பேரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கி. இராமச்சந்திரன் அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எம். அன்பழகன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் பழனி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. ஜெ. பன்னீர்செல்வம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் திருநாவலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. விவேக், பிரபல திரைப்பட நடிகர் மற்றும் சமூக ஆர்வலர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானங்கள். "சின்னக் கலைவாணர்" எனத் திரையுலகில் புகழ்பெற்ற, பல்கலை வித்தகராக விளங்கிய நகைச்சுவைக் கலைஞர் திரு. விவேக் அவர்கள், 17–4–2021 அன்று உடல்நலக்குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தனது நடிப்பாற்றலால் நகைச்சுவையுடன் விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்கிய திரு. விவேக் அவர்கள், மரம் நடுதல் போன்ற சூழலியல் சார்ந்த சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பத்மஸ்ரீ விருது பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரது மறைவு திரைப்படத் துறைக்கும், ரசிகப் பெருமக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகப் பெருமக்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.